**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 53/2021**

**Date :26.03.2026**

**வா.சா. 4- வைகுண்டராஜன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

தமிழ்நாடு சர்வே மற்றும் எல்கை நிர்ணய சட்டப்படி பழைய சர்வே எண்ணின் அடிப்படையில் தற்போதைய நிலத்தை அளக்கமுடியாது என்றால் சரிதான். புதிய சர்வே எண் அரசு எல்கை பதிவேட்டில் (FMB) அடிப்படையில் தான் தற்போதைய அளவீடுகள் உள்ளது என்றால் சரிதான். பட்டா மற்றும் புதிய சர்வே எண்ணின் படி வாதியின் சர்வே எண் 424/18 ற்கு உட்பட்ட நிலத்தின் அளவு 6 ஏர் 14.820 செண்டாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி ஜயாதுரைக்கு சொந்தமான சர்வே எண் 424/2 ற்கு உட்பட்ட நிலத்தின் பட்டா பதிவுகளின் படியும் அரசு நிர்ணய அளவுகளின் படியும் நிலத்தின் பரப்பளவு 11 ஏர் அதாவது 27.170 சென்ட் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக ஏதேனும் பிரச்சனை உள்ளதாக வாதியோ வாதிக்கு சம்மந்தப்பட்ட நபர்களோ ஏதேனும் மனு கொடுத்தார்களா என்றால் இல்லை. பொதுவாக ஒரு சொத்து குறித்து எவ்வித மனுவும் வரவில்லை என்றால் அந்த சொத்து குறித்து எவ்வித தகராறும் இல்லை என்று அர்த்தம் என்றால் சரிதான்.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**